## சபை எடுத்துக் கொள்ளப்படுதல்

## இரகசிய வருகை

இயேசு கிறிஸ்து எதிர்பார்க்காத வேளையில் வானத்திலிருந்து மத்திய ஆகாயத்திற்கு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் ஆவி ஆத்துமாவாகிய உள்ளான மனிதரோடு வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், மறுரூபமாக்கப்பட்ட மகிமையின் சரீரங்களோடு இணைந்து உயிர்த்தெழும்புவார்கள்.

**கர்த்தர் தாமே வருவார்!** (1 தெச 4:13–17, 1 கொரி 15:51–54)

இயேசுவின் சத்தம் யோவா 5:25, 11:43,44 1 தெச 4:16

ஆரவாரம் பிரதான தூதனுடைய சத்தம் 1 தெச 4:17

தேவ எக்காளம்

கிறிஸ்துவின் இரகசிய வருகையில்

- கேட்பதற்கு ஒரு சத்தம்
- காண்பதற்கு ஒரு காட்சி
- உணர்வதற்கு ஓர் அற்புதம்
- களிகூர ஒரு சந்திப்பு
- அனுபவிக்க ஒரு மனநிறைவு

Rapture = எடுத்துக் கொள்ளுதல் (அ) பறித்துக் கொள்ளுதல்

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

உயிரோடு இருக்கும் விசுவாசிகளும் மறுரூபமாக்கப்பட்டு மகிமையின் சரீரத்தோடு உயிரோடு மேகங்கள் மேல் எடுத்துக் கொள்ளப்பட்டு இயேசுவை ஆகாயத்தில் சந்தித்து அவருடன் பரலோகிற்கு சென்று விடுவோம்.

**கிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் இயேசுவை காண மாட்டார்கள்**

**எனவே, இது இரகசிய வருகை.**

**<u>எப்பொழுது நடைபெறும்</u>**

- அந்தி கிறிஸ்து இஸ்ரவேலருடன் உடன்படிக்கை ஏற்படக்கூடும். அச்சமயத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை (உண்மை விசுவாசிகளின் கூட்டம்) எடுத்துக் கொள்ளப்படும். 2 தெச 2:6–8
- நாம் வாழும் இக்காலத்தில் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகை இருப்பதற்கான வாய்ப்பு மிக அதிகம். எல்லா மனிதர்களும் நற்செய்தி அறிவிக்கப்பட்டதும் முடிவு வரும். மத் 24:14

| எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள் | கைவிடப்படுகிறவர்கள் |
|---|---|
| கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் | கிறிஸ்துவுக்கு வெளியே மரித்தவர்கள் |
| உயிரோடு இருக்கும் உண்மை விசுவாசிகள் | உயிரோடு இருக்கும்<br>உண்மையற்ற விசுவாசிகள்<br>விசுவாசிகளாக நடித்தவர்கள்<br>கிறிஸ்துவுக்கு வெளியே உள்ளவர்கள் |

எனது வாழ்வில் தேவன் செயல்பட்டு முடிக்கவில்லை பூரணம் அடையவில்லை, கர்த்தருக்குள் வளர்ந்து கொண்டிருக்கிறேன். ரோமர் 8:28–30, பிலி 1:5

இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட தகுதி என்ன ?

**‘‘இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டேன், இரட்சிக்கப்படுகிறேன், அதே கிருபையினாலே இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவேன்’’**

இரகசிய வருகை குறித்து பயமுறுத்துங்கள் என்று கூறாமல் தேற்றுங்கள் என கூறுகிறார். 1 தெச 4:18

தேற்றுங்கள் என்றால்

- ஆறுதல்படுத்துங்கள்
- கற்றுக் கொடுங்கள்
- அறிவுரை கூறுங்கள்
- ஒருவருக்கொருவர் இதைக் குறித்துக் பேசிக் கொள்ளுங்கள்

சரியான சமயத்தில் இயேசு வருவார் அவருடைய வேளையில் அவருடைய திட்டப்படி வருவார், நமக்காக வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின் வருவார். யோவா 14:2,3

சபை எடுத்துக் கொள்ளப்படுதலில் எடுத்துக் கொள்ளப்பட்டு பரலோகில் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நாம் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து எவ்விதமாக வாழ்ந்தோம் என கணக்குக் கொடுக்க வேண்டும் (உண்மையான சேவைக்கு பரிசளிக்கப்படும், நிகழ்ச்சி = கிறிஸ்துவின் நியாயாசனம்) 1 கொரி 3:11–15, 2 கொரி 5:10

கிறிஸ்து மீண்டும் வருகிற சபை எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழ்ச்சியை குறித்த நம்பிக்கைக்கு ஏற்றார்போல் வாழ எதிர்பார்க்கப்படுகிறோம்.

- ❖ நம் வாழ்க்கையை தூய்மைப்படுத்தும் விளைவு உண்டுபண்ண வேண்டும். 1தெச 2:23, 1 யோவா 3:3
- ❖ இரட்சிக்கப்படாதவர்களுக்காக ஜெபிப்பதற்கும் சுவிசேஷம் அறிவிக்கவும் பாரம் ஏற்பட வேண்டும். யூதா 21–23, எசே 33:6, ஆதி 19:14
- ❖ உபத்திரவங்கள் சோதனைகள் உள்ள வேளையிலும் நம்மை விடா முயற்சியுடையவர்களாக இருக்க உற்சாகப்படுத்த வேண்டும். ரோம 8:18, 2 கொரி 4:17, 1 தெச 4:13–18

- கிறிஸ்துவுக்குள்ளாக நிலைத்திருக்கும்படி இருக்க செயல்படுத்த வேண்டும்.
  1 யோவ 2:28
- நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய நம்பிக்கையாக இது விளங்க வேண்டும்.
  1 தெச 4:18, 2 தெச 1:17, 2 தீமோ 2:12
- ஒருமைப்பாட்டிற்கும் அன்பிற்கும் இது தூண்டுகோலாக விளங்க வேண்டும்.
  1 தெச 3:12, 13.
- நடக்கையில் நிதானம் உடையவர்களாக
  இனிமையும் விவேகமும் உடையவர்களாக
  மென்மையானவர்களாக
  நாம் விளங்க உற்சாகப்படுத்த வேண்டும். பிலி 4:5.

வருகையை ஆவலுடன் எதிர்நோக்கி தங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை சம்பாதிக்கும்படி வேலைக்குச் செல்லாமல், சோம்பேறிகளாக மாறிவிடக் கூடாது.

சோம்பேறிகளாக இருப்பது ஆவிக்குரிய மனநிலை ஆகாது. 2 தெச 3:6

கடுமையான உழைப்பு, விடா முயற்சி, தனக்குத் தேவையானவற்றை தானே சம்பாதிப்பது பவுலிடமிருந்து தெசலோனிக்கேயர் பெற்ற முறைமை.

பவுல்

எந்த ஒரு வேளையும் கிறிஸ்து வரக்கூடும் என ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருந்தார். ஆனாலும் தன்னுடைய வாழ்நாளின் போது கர்த்தர் வராமலும் இருக்கலாம் என்னும் உணர்வோடு அவர் கிறிஸ்துவின் (பணி) ஊழியம் செய்தார், வேலையும் (கூடார தொழில்) செய்தார். 2 தெச 3:7

பவுலுடைய வாழ்க்கைக்கு தேவையானவற்றை அவரே வேலை செய்து சம்பாதித்தார். நற்செய்தியை பிரசங்கத்தார். 1 தெச 3:8

**<u>இரகசிய வருகை எதிர்பார்ப்பின் நோக்கம்:</u>**

1) ஆழ்ந்த / மிக்க விருப்பத்துடன் மகிழ்ச்சியுடன் எதிர்பார்ப்பர்.
2) தப்புவிக்கும் கருவியாக பயன்படுத்துவார்கள். எப்படி எனில்,
    a. விரும்புகிறது போல் நடக்கும் போது பின்னர் வாரும் என கூறுவது.
    b. பிரச்சனை இருக்கும் போது உடனே வாரும் என கூறுவது.

| **விசுவாசிகள் நடுவானிற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் (இரகசிய வருகை)** | **கிறிஸ்து வெளிப்படுதல் (பகிரங்க 2ம் வருகை)** |
|---|---|
| 1 கிறிஸ்து ஆகாயத்தில் நடுவானில் இறங்கி வருகிறார் 1 தெச 4:17 | கிறிஸ்து பூமிக்கு வருகிறார். சக 14:14 |
| 2) கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக வருகிறார். 1 தெச 4:16,17 | கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு வருகிறார். 1 தெச 3:13, யூதா 14 |
| 3) இது பழைய ஏற்பாட்டு காலத்தில் அறியப்படவில்லை 1 கொரி 15:51 | பஜாய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. சங் 72 ஏசா 11, சக 14 |
| 4) இது கிறிஸ்துவின் நாளோடு இணைந்து சொல்லப்படுகிறது. 1 கொரி 1:8, 2 கொரி 1:4, பிலி 1:6,10 | இது கர்த்தருடைய நாளுடன் இணைத்துப் பேசப்படுகிறது. 2தெச 2:1–12 |
| 5) ஒரு கண் இமைக்கும் நேரத்தில் விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். 1 கொரி 15:51 | வானத்தில் உண்டாகும் சில அறிகுறிகளால் முன்னறிவிக்கப்படும் மத் 24:29,30 |
| 6) இது முதன்மையாக சபையோடு தொடர்புடையது. யோவா 14:1–4, 1 கொரி 15:51–58, 1 தெச 4:13–18 | இது முதன்மையாக இஸ்ரவேலுடன் தொடர்புடையது, பின்னர் டிறநன நாடுகளுடன் தொடர்புடையதாக விளங்கும். மத் 24:1–25,46 |
| 7) இது உண்மை விசுவாசிகளுக்கு ஆசீர்வாத வேளையாக விளங்கும். 1 தெச 4:18 | இது முக்கியமாக ஆக்கினை வலியுறத்தப்படுகிறது. 2 தெச 2:8–12 |
| 8) மணவாளனாக வருகிறார் (மணவாட்டியாகிய சபையை அழைத்துச் செல்ல வருகிறார்) | மனுஷ குமாரனாக வருகிறார். மத் 16:28, 24:27, 30, 39, 26:64 மாற் 13:26, லூக் 21:27 |

கிறிஸ்துவின் நாள் என்பது சபை எடுத்துக் கொள்ளப்படுவதையும் கிறிஸ்துவின் நியாயாசனத்தையும் தொடர்புபடுத்துகிறது.

இரகசிய வருகை எப்போது ?

அந்த கிறிஸ்து வெளிபடுமுன் 2 தெச 2:1–8

எந்த நிமிடமும் காலை, மதியம், இரவு லூக் 17:34–36

யார் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் ? (உண்மை கிறிஸ்தவர்கள்)

1) கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்
2) கிறிஸ்துவுக்குள் வாழுகின்றவர்கள் 1 தெச 4:16,17

இரகசிய வருகையின் நோக்கம்

1) பரிசுத்தவான்களை பரலோகத்திற்கு கொண்டு செல்வது
2) இயேசு கிறிஸ்துவின் நியாயாசனம் முன் நிறுத்தப்பட (2 கொரி 5:10) (தண்டனை அல்ல, வெகுமதி / பரிசு மட்டுமே) கிரியைகளுக்காக ஏற்பட்ட நியாய தீர்ப்பு (1 கொரி 3:11–15) (பரிசுத்தவான்களுக்கு பரிசளிக்கும் விழா)

கிரியைகளுக்கு பலன் வெளி 20:12,13, 22:12, 1 பேது 1:17 கிரியை பரலோகத்திற்கு எடுத்து செல்லலாம். (வெளி 14:13) அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப் போகும்.

வெற்றி பெற்றவர்களுக்கு கிரீடம்

பிரதிபலன் கிடைக்க பெறாதோர் வெட்கத்தோடு காணப்படுவார்கள்.

கிரீடங்கள் – விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்படும். 1 கொரி 9:25, 2 தீமோ 2:5

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

விசுவாசிகளின் பிரதிபலன்களுக்கேற்ப பரலோகில் மகிமை வேறுபாடு காணப்படும் 1 கொரி 15:40–41, 49

இரட்சிப்பு

| கிரீடம் | யாருக்கு | வசனம் |
|---|---|---|
| அழிவில்லாத கிரீடம் | இச்சையடக்கத்துடன் பழைய மனிதனை வென்றவர்களுக்கு | 1 கொரி 9:25 |
| மகிழ்ச்சியின் கிரீடம் | ஆத்தும ஆதாயம் செய்பவர்களுக்கு | 1 தெச 2:19 |
| நீதியின் கிரீடம் | கிறிஸ்துவின் வருகையை விரும்புகிறவர்களுக்கு | 2 தீமோ 4:8 |
| ஜீவ கிரீடம் | சோதனையை சகிப்போருக்கு | யாக் 1:12 |
| மகிமையுள்ள வாடாத கிரீடம் | தேவ மந்தையை சிறப்பாக கண்காணிப்போருக்கு | 1 பேது 5:4 |
| கிரீடம் | ஆவிக்குரிய வெற்றி வாழ்க்கைக்கு | வெளி 3:11 |

சாத்தான் மேல் ஜெயம் கொள்ளுகிறவன் தேவனுடைய ஆலயத்திலே தூணாக ஆக்கப்படுவான். வெளி 3:12, 13

**<u>பிரதிபலன்கள் / வெகுமதிகள்</u>** – 1 யோவா 2:13, 4:4, 5:5

1) ஆவிக்குரிய உணவு வெளி 2:7
2) ஒரு புதிய பெயர் வெளி 2:17
3) ஆளுகை அதிகாரம் வெளி 2:26
4) நீதியின் ஆடை வெளி 3:5
5) ஓர் ஆலயத்தூண் வெளி 3:12
6) சிங்காசனத்தில் அமர்தல் வெளி 3:21
7) ஒரு நித்திய சுதந்திரம் வெளி 21:7

**<u>ஆவிக்குரிய பதவி</u>**

1) நேர்மை லூக் 22:28, 29
2) பொறுமை 2 தீமோ 2:12, 13
3) பரிசுத்தம் வெளி 11:5,6 2:27
4) சாத்தானை ஜெயித்தல் வெளி 20:4